## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 139/2017 | Date : 05.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: அஜீத்குமார் | S/o. வெங்கிடு | |
| Evidence Recorded Time: 01.21 P.M. to 01.55 P.M | | |

**1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1-ம் பிதிவாதி என்னுடைய தாத்தா மாதையன் என்றால் சரிதான். எனது தாத்தா தற்போதும் உயிருடன் தான் இருக்கிராறா என்றால் இருக்கிறார். எனது தாத்தாவின் அப்பா பெயர் பொன்னப்ப கவுண்டர் ஆகும். பொன்னப்ப கவுண்டருக்கு நான் கொள்ளு பேரன் என்றால் சரிதான். பொன்னப்ப கவுண்டருக்கு எத்தனை மகன்கள், மகள்கள் என்றால் தெரியாது. எனது தாத்தா மாதையன் உடன் பிறந்தவர்கள் 1) முத்துசாமி, 2) சின்னதம்பி, 3) ரத்தினம்மாள், 4) பாப்பாத்தி ஆகியோர்கள் என்றாலும், பொன்னப்ப கவுண்டரின் வாரிசுகள் என்றாலும் எனக்கு தெரியாது. பொன்னப்ப கவுண்டர்தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். பொன்னப்ப கவுண்டர் நிலம் வாங்கியதாக என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், எவ்வளவு நிலம் வாங்கினார் என்றால் 5 ஏக்கர் 40 செண்ட் நிலத்தை வாங்கினார். மேற்படி நிலங்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்றால் பள்ளிபட்டி கிராமத்தில் உள்ளது. மல்லிகுந்தம் கிராமத்திலும் பொன்னப்ப கவுண்டருக்கு சொந்தமான நிலங்கள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 5 ஏக்கர் 40 செண்ட் நிலத்திற்கான பட்டா எண், சக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் தெரியும். கிழக்கு பக்கம் மாது என்பவரின் நிலமும், தெற்கு புறம் காமராசு என்பவரின் நிலமும், மேற்கு பக்கம் ரோடும், வடக்கு பக்கம் ரங்கன் நிலமும் உள்ளது. மேற்படி நிலத்திற்கு பட்டா யார் யார் பெயரில் இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியும், மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த பட்டாவில் என் அப்பா பெயர் இல்லை என்றால் சரிதான். அந்த பட்டாவில் என் தாத்தா மாதையன், சின்ராசு, மாணிக்கம் ஆகியோர் பெயர்கள் உள்ளது. சின்ராசு மற்றும் மாணிக்கம் என்னுடைய பெரியப்பா ஆவார்கள். என் அப்பா பெயர் பட்டாவில் இடம் பெறாததற்கான காரணம் தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தா மாதையனுக்கு

பொன்னப்ப கவுண்டர் மகன் என்பதால்தான் பாகம் கிடைத்தது என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு கிடைத்த நிலம் வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் வாரிசு அடிப்படையில் கிடைத்தது ஆகும். வாரிசு அடிப்படையில் மாதையனை தவிர வேறு யாருக்கும் தாவா சொத்தில் உரிமை இல்லை என்றால் சரிதான். மாதையனுக்கு வாரிசு அடிப்படையில் கிடைத்த நிலத்தினை அவர் உயிருடன் இருக்கும் போது அவர் விற்பதற்கும், தானசெட்டில்மெண்ட் செய்து வைப்பதற்கும் உரிமை உள்ளது என்றால் இல்லை. மாதையனுக்கு மட்டுமே உரிமை இருப்பதால் அவருடைய அந்தி காலத்திற்கு பிறகுதான் மகன்கள், மகள்கள், மகன்வழி, மகள்வழி வாரிசுகள் உரிமை கோரமுடியும் என்றாலும், நான் தாவா சொத்தில் உரிமை கோருவதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. நான் தற்போது முத்தாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நானும், என் சகோதரியும் தனியாக குடியிருந்து வருகிறோம். என் பெற்றோர் பள்ளிப்பட்டியில் குடியிருந்து வருகிறார்கள். எனது பெற்றோர் பள்ளிப்பட்டி கிராமத்தில் வெடிக்காரனூரில் வசித்து வருகிறார்கள். நான், என் சகோதரி, என் பெற்றோர் அனைவரும் ஒன்றாகத்தான் முத்தாம்பட்டியில் வசித்து வருகிறோம் என்றாலும், என் பெற்றோர் பள்ளிப்பட்டியில் வசிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் இரண்டு வயது முதல் தற்போது வரை முத்தாம்பட்டியில் குடியிருந்து வருகிறோம். நாங்கள் தான் தனியாக சமைத்து சாப்பிட்டு வருகிறோமா என்றால் சின்ன வயதில் அம்மா வழி தாத்தா பராமரித்து வந்ததார், பெரியவர்கள் ஆனதும் நாங்களே சமைத்து சாப்பிட்டு வருகிறோம். எனது பெற்றோர் பள்ளிப்பட்டியில் வசித்து வருவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் அவர்கள் தந்தால் தாக்கல் செய்கிறேன். நான் பள்ளி படிப்பை மேச்சேரியிலும், கல்லூரிபடிப்பை சேலத்திலும் படித்தேன். 1 ம் வகுப்பு முதல் 5–ம் வகுப்பு வரை முத்தாம்பட்டியிலும், 6 முதல் 12ம் வகுப்பு வரை மேச்சேரியிலும் படித்தேன். தாவா சொத்துக்களில் எவ்வளவு நிலத்தை யார் யார் ஓட்டி வருகிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். தற்போது என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் தட்டைபயிர் செய்யப்பட்டுள்ளது. பருத்தி, அவரை ஆகியவற்றை பயிர் செய்வார்கள். என் அப்பா, அம்மா என் தாத்தாவின் ஒப்புதலின் பேரில் 4ம் பிரதிவாதி பழனியம்மாளுக்கு கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்று வழக்கில் சொல்லியுள்ளேன், அது போலியான பத்திரங்கள் ஆகும். 1 ஏக்கர் 80 செண்ட் நிலம்

கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். மேற்சொன்ன நிலத்தை தற்போது தட்டை பயிறு பயிர் செய்துள்ளார்கள். தாவா சொத்து சம்மந்தமாக அடங்கல், வரி ரசீது ஆகியவை என் அப்பா பெயரிலோ, என் பெயரிலோ ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. 14.05.2017 அன்று தாவா சொத்து கேட்டு பஞ்சாயத்து வைத்தேன். பஞ்சாயத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் வெடிக்காரனூரில் குடியிருக்கும், மாணிக்கம், காமராசு மற்றும் 15, 20 நபர்கள் கலந்து கொண்டார்கள். பஞ்சாயத்தில் என் தாத்தா, அப்பா, அம்மா, பெரியப்பா ஆகியோர்களை வைத்து பேசினோம். அந்த பஞ்சாயத்தில்தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டதாக சொன்னார்கள், அப்போதுதான் எனக்கு தெரியவந்தது. எனக்கும், என் தங்கைக்கும் மைனர்களாக சேர்த்து தான் இந்த கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த கிரையம் பற்றி எங்களுக்கு தெரியாது. நாங்கள் இளவர்களாக இருந்ததால் சொத்தை விற்பது பற்றி எங்களிடம் கேட்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. சட்டப்படி உரிமையுள்ள நபர்களால் கிரைய சொத்தினை விற்பனை செய்ய உரிமை உண்டு என்ற நிலையில் இந்த கிரைய பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. எனது அப்பா, அம்மா எங்களுக்கும் சேர்த்து விற்பனை செய்ததால் அந்த கிரைய பத்திரம் செல்லக்கூடியது என்றாலும், அந்த சொத்தை சுவாதீனத்திற்கு எடுத்துக்கொண்டதாலும், எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. பாகம் பிரிக்கப்படாத சொத்தை விற்பனை செய்ததால் அந்த கிரைய பத்திரம் செல்லாது. என் அப்பா, அம்மா விற்பனை செய்த சொத்துக்களில் அவர்கள் உரிமை கோரவில்லை என்ற காரணத்தினால் அவர்களை எதிர் தரப்பினராக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் தான் எங்கள் மூலம் வழக்கை தாக்கல் செய்து வேண்டும் என்றே ஒருதலைபட்சமாகியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.